**செய்தி வெளியீடு எண்:221** **நாள்: 20.04.2017**

## திருக் கோயில்களுக்கான மேம்பாட்டு பணிகள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அலுவலர்கள் கூட்டத்தில் ஆய்வு

==========================================

சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் இன்று (20.04.2017) இந்து சமய அறநிலையத் துறையின் அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசும்போது, திருக்கோயில்களுக்கான மேம்பாட்டு பணிகள் குறித்தும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திருக்கோயில் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்கள், திருக்கோயில்களில் பழமை மாறாமல் மேற்கொள்ளப்பட்டு வரும் திருப்பணிகள் குறித்தும், திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக திருக்கோயில்களில் நடைபெற்றுவரும் நவீன கழிவறை, குளியல்அறை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளுக்காக கட்டுமானப்பணிகள் நடைபெறுவதை அலுவலர்கள் கண்காணித்து உரிய காலத்தில் பணிகளை முழுமையாக நிறைவேற்றி பக்தர்கள் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறும், திருக்கோயில் குளங்களுக்கான வரத்து வாய்க்கால்களை சீரமைத்து மழை காலங்களில் மழை நீர் சேகரித்திடவும் அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

கோயில் சுவர்களில் மரக்கன்றுகள் வளர விடாமல் தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கோயில் பிராகாரங்களில் வழிகாட்டும் குறியீட்டுப் பலகைகள் வைக்கவும் அறிவுரை வழங்கினார். கோயில் சொத்துகளுக்கான வாடகை, வரி பாக்கிகளை நிலுவை இல்லாமல் வசூலிக்கவும், கோயில் சொத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளவும், திருத்தேர் திருப்பணிகள் குறித்த காலத்தில் நிறைவேற்றவும், திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் காலதாமதம் இல்லாமல் சுவாமி தரிசனம் செய்து கோயில் நிர்வாகத்தைப் பாராட்டும் வகையில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித்தர அலுவலர்கள் முனைப்பாக பணியாற்ற வேண்டும் என்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை முதன்மை செயலாளர் திரு. அபூர்வ வர்மா இ.ஆ.ப, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முக மணி, கூடுதல் ஆணையர் (பொது) ந. திருமகள், அனைத்து மாவட்டங்களில் பணியாற்றும் இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், பொறியாளர்கள், தணிக்கை அலுவலர்கள் மற்றும் தலைமையிட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**